# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 31 /மா/2022**
**நாள் : 20.04.2022**

திரு. B. விஜயகுமார்,
சென்னை– 81. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–4,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

சென்னை, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், எண்.14/15, சால்ட் குறுக்கு தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு B.விஜயகுமார் என்பவரின் 08.03.2022 நாளிட்ட மனு 14.03.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 31/மா/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப்பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், எண்.14/15, சால்ட் குறுக்கு தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. B. விஜயகுமார் என்பவர் தமது 08.03.2022 நாளிட்ட முறையீட்டு மனுவில் சென்னை 600 118, கொடுங்கையூர், மண்டலம் - 04, பகுதி – 09, வார்டு – 35, எருக்கஞ்சேரி, கந்தசுவாமி தெருவில் (பவித்ரா மருத்துவமனை பின்புறம்) கதவு எண்.10/20, என்ற இடத்தில் திரு. கன்னியப்பன் என்பவரும் மற்றும் கதவு எண்.9/19, என்ற இடத்தில் திரு. சுப்பிரமணி என்பவரும் உள்ளாட்சி அமைப்புகளிடம் முறையாக எந்த விதமான கட்டுமான அனுமதியும் பெறாமல் கடந்த வருடத்திலிருந்து கட்டிடம் கட்டிக்கொண்டு வருகின்றனர். மேற்கண்ட இடத்தின் இரு பகுதிகளின் மொத்த அளவான சுமார் 4,596 சதுர அடிகள் அனைத்தும் சென்னை பாரிமுனையில் உள்ள அருள்மிகு. கந்த சுவாமி திருக்கோவிலுக்கு சொந்தமான இந்து சமய அற நிலையத்துறை நிர்வாகத்தின் கீழ்

வரும் இடமாகும். இதை மேற்கண்ட நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து அபகரிக்க முயல்கின்றனர். இடம் தொடர்பான உரிமை பிரச்சனை ஒரு பக்கம் இருந்தாலும், சென்னை மாநகரில் முறையாக கட்டிட அனுமதி பெறாமல் கட்டுமானம் செய்யப்பட்டால் அதை சட்டப்படி தடுத்து நிறுத்தி உரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டியது சென்னை மாநகராட்சி அலுவலர்களின் முக்கிய கடமையாகும். மேலும் அனுமதியற்ற கட்டுமானங்களால் மாநகராட்சிக்கு வரவேண்டிய விண்ணப்ப, அனுமதி கட்டணம், வரி வருவாய் போன்றவை கிடைக்காமல் இழப்பும் ஏற்படுகிறது.

இது தொடர்பாக பலமுறை சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்களிடம் புகார் அளிக்கப்பட்டும் எந்த நடவடிக்கையும் இல்லை, கடைசியாக நாள்: 24.01.2022 அன்று மண்டலம் -04, அலுவலகத்திற்கு எழுத்துப்பூர்வமாக புகார் அளித்துள்ளேன். அதற்கும் தற்போது வரை எந்த நடவடிக்கையும் இல்லை. புகாருக்கான பதிலும் அனுப்பப்படவில்லை, எனவே, இந்த மனுவுடன் இணைத்து அனுப்பப்பட்ட புகார் மனுவினை தீர விசாரணை செய்து மேற்கண்ட அனுமதியற்ற கட்டுமானத்தின் மீது தகுந்த நடவடிக்கைகளை எடுக்க சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உரிய ஆணையினை பிறப்பிக்க வேண்டுமென தங்களை நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

2) இம்மனுக்கள் தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 12.04.2022 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 16.03.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

3) முறையீட்டு மனுதாரர் 12.04.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :

"சென்னை 600 118, கொடுங்கையூர், மண்டலம் - 04, பகுதி – 09, வார்டு – 35, எருக்கஞ்சேரி, கந்தசுவாமி தெருவில் கதவு எண்.10/20, என்ற இடத்தில் திரு. கன்னியப்பன் என்பவரும் மற்றும் கதவு எண்.9/19, என்ற இடத்தில் திரு. சுப்ரமணி என்பவரும் சென்னை மாநகராட்சியிடமிருந்து எவ்விதமான கட்டுமான அனுமதியும் பெறாமல் கட்டிடம் கட்டி வருகின்றனர். அதை சட்டப்படி தடுத்து நிறுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது சென்னை மாநகராட்சி அலுவலர்களின் முக்கிய கடமையாகும். ஆனால் அதை அவர்கள் செய்யவில்லை. இதனால் மாநகராட்சிக்கு வரவேண்டிய வருவாய் போன்றவை கிடைக்காமல் இழப்பும் ஏற்படுகிறது. இது சம்மந்தமாக பலமுறை புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

இம்முறைமன்ற நடுவத்தில் புகார் அளித்த பின்பு தான் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். எனவே, மேற்கண்ட அனுமதியற்ற கட்டுமான உரிமையாளர்கள் மீது உரிய விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும் எனது 08.03.2022 நாளிட்ட மனுவையே கூடுதல்

வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக் கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

4) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4-ன் இளநிலைப் பொறியாளர் அவர்கள் 12.04.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :

"மனுதாரர் திரு. விஜயகுமார் என்பவரின் மனுவில் தெரிவித்துள்ள 9/19 மற்றும் 10/20 கந்தசாமி கோவில் தெரு எருக்கஞ்சேரியில் அமைந்துள்ள மேற்கண்ட வீடுகள் திரு. சுப்பிரமணி மற்றும் கன்னியப்பன் (late) ஆகியோர் முறையே மாநகராட்சியின் எவ்வித அனுமதியுமின்றி கட்டடம் கட்டியுள்ளனர். அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ள மேற்கண்ட இரண்டு கட்டடங்களுக்கும் 22.1.2022 அன்று Stop work Notice-ம் மேலும் 31.3.2022 அன்று Lock & Seal and Demolition Notice-ம் இரண்டு வீட்டின் உரிமையாளர்களுக்கும் தாக்கீதுகள் வழங்கப்பட்டது. அதற்கு அடுத்தகட்ட நடவடிக்கையாக அளிக்கப்பட்ட காலகெடுவிற்குப் பின்னர் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரிடமிருந்து தகுந்த உத்தரவு பெற்று மேற்கண்ட இரண்டு கட்டடத்திற்கும் Lock and Seal வைக்கப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரர் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன :

மனுதாரர் திரு. B. விஜயகுமார் அனுமதியற்ற கட்டுமான உரிமையாளர்கள் மீது உரிய விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்க கோரியுள்ளார்.

அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் உரிமையாளர்களுக்கு 22.1.2022 அன்று Stop Work Noticeம் 31.3.2022 அன்று Lock and Seal and Demolition Notice-ம் வழங்கப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரிடமிருந்து தகுந்த உத்திரவினை பெற்று மேற்சொன்ன இரண்டு கட்டடத்திற்கும் Lock and Seal வைக்கப்படும் என மாநகராட்சி அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நேர்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ஐச் சேர்ந்த அலுவலர்கள் சரியான முறையில் களப்பணி மேற்கொண்டு இருந்தால் இதுபோன்று ஒரு நிகழ்வு நடைபெற வாய்ப்பு இருக்காது. தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971ன் படியும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும் 22.01.2022 அன்று Stop Work Notice-ம்,

உள்ளாட்சி தேர்தலின் காரணமாக 31.3.2022 Lock and Seal மற்றும் Demolition Notice–ம் வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக அனுமதியற்ற கட்டடத்தின் மீது மாநகராட்சியால் மேற்கொள்ளபட வேண்டிய தொடர் நடவடிக்கைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர், மண்டலம் - 4 அவர்களை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. B. விஜயகுமார்,
14/15, சால்ட் குறுக்கு தெரு,
துர்கா தேவி நகர், தண்டையார்பேட்டை,
சென்னை – 600 081.

2) மண்டல அலுவலர்,
மண்டலம்–4,
பெருநகர சென்னை மாநகராட்சி,
266, திருவெற்றியூர் நெடுஞ்சாலை,
சென்னை – 600 021.

3) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர், (Nodal Officer)
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

20/4/22

செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032